கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

P.W.–1

O.S.No.336/2024

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. நூர்முகம்மது | வயது: 60 |
| த/பெ. : திரு. பஷீர்ஜான் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். 1,2 பிரதிவாதிகள் ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 27.12.1996 ம் தேதிய வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் (அசல் ஆவணம் முதல் பிரதிவாதியிடம் உள்ளதாக சாட்சி கூறுகிறார்) | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 1** |
| 17.4.2024 – கதவு எண். 1/185 க்குரிய 2024–2025 ம் வருடத்தில் வீட்டுவரி ரசீது | அசல் | **வா.சா.ஆ 2** |
| 6.4.2024 – கதவு எண். 1/185 க்குரிய 2023–2024 – தண்ணீர் வரி ரசீது | அசல் | **வா.சா.ஆ 3** |
| 25.10.2011 – 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 4** |
| 12.2.2018 – 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பிழைத்திருத்த பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| 8.8.2024 – வாதி நல்லூர் சார்பதிவாளருக்கு அனுப்பிய தடங்கல் மனு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 6** |
| 30.08.2024 – வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 7** |
| வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **வா.சா.ஆ 8** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.08.20 21:11:06 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.